22nd October 1971]

மத்திய அரசாங்கம் தென் பக்கிங்காம் கால்வாயைத்தான் இப்போது தூர் எடுப்பதற்கு ஒப்புதல் அளித்திருக்கிறது. அந்த வேலை இந்த ஆண்டு துவக்கப்படுவதற்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இத் திட்டத்தின்படி தூர் எடுப்பதன் மூலமாக பக்கிங்காம் கால்வாய் கழிமுகப் பகுதி மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப் போல அபிவிருத்தியடைந்து வசதிகள் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Virudhunagar–Narikkudi Highways

* 13 Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Government have made any provision for repairing the Virudhunagar–Narikkudi Highways, Ramanathapuram district ; and

(b) whether any request has been received from the District **Collector** to give priority to this scheme and implement it?

விருதுநகர்–நரிக்குடி நெடுஞ்சாலை

திரு. வி. தங்கபாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் விருதுநகரிலிருந்து நரிக்குடி செல்லும் நெடுஞ்சாலையை செப்பனிடுவதற்கு அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதா ?

(இ) இந்தத் திட்டத்தை முதன்மைப்படுத்தி செயல்படுத்தும்படி மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து வேண்டுகோள் வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) உறுப்பினர் குறிப்பிட்டுள்ள சாலை காரியாபட்டியிலிருந்து நரிக்குடி புலிவாக்கரை சாலையினை 3/2-வது மைலில் சந்திக்கும் சாலையாகும். விருதுநகர்–நரிக்குடி சாலைக்கு கப்பிபோட்டு மேற்படி சாலையில் சிறுபாலங்கள் கட்டுவதற்கென ரூ. 4.80 லட்சம் மதிப்பீட்டில் ஒரு திட்டம் நான்காம் ஐந்தாண்டுத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால் இவ்வேலைக்கு நிதி இன்னும் ஒதுக்கப்படவில்லை.

(இ) ஆம்.

திரு. வி. தங்கபாண்டியன் : தலைவர் அவர்களே, குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது, முதுகுளத்தூர்–அருப்புக்கோட்டைப் பகுதியில் ஜாதிக் கலவரங்கள் ஏற்பட்டபோது மத்திய அரசு அமைச்சரின் ஆலோசனையின் பேரில் போடப்பட்ட முக்கியமான சாலையாகும். இந்தச் சாலையை பொதுத்துறை எடுத்துக்கொண்ட பிறகு இதுவரையில் எந்தவிதமான ரிப்பேரும் செய்யப்படவில்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்பாக உடனடியாக இந்தச் சாலையை செப்பனிட வேண்டும். ஏறக்குறைய 40 பஞ்சாயத்துக்களை இணைக்கும் முக்கியமான சாலையாக இது இருப்பதால், இந்த சாலையினுடைய ரிப்பேர் செலவை அரசாங்கம் ஏற்று செய்வதற்கு முன்வருமா?

[22nd October 1971

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The road was constructed under "Security Measure Scheme" and was taken up for maintenance by the Highways and Rural Works Department.

The Collector of Ramanathapuram has reported that Narikkudi Union is a backward area, that Virudhunagar is a marketing centre and hence improvements to the Highways road from Narikkudi to Virudhunagar is quite necessary with a view to provide transport facilities to the backward area. The Collector has also reported that during the meeting held at Madras in January 1970 for finalising the Fourth Plan Part II Scheme, Thiru Thangapandian, M.L.C. stressed that this road work should be given top priority.

The Chief Engineer (Highways and Rural Works) has reported that the work has not been also included in the pruned Master Plan for Special Rural Works Programme in Drought areas drawn up for Ramanathapuram district. He added that the work will be recommended to Government for consideration in the future State Roads Part II proposals subject to availability of funds and relative priority.

Cottage Industries

* 14 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Co-operation be pleased to state the amount spent for the development and promotion of cottage industries in the State during the years 1968-69, 1969-70 and 1970-71?

குடிசைத் தொழில்கள்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இம் மாநிலத்தில், குடிசைத் தொழில்களை வளர்க்கவும், ஊக்குவிக்கவும், 1968–69, 1969–70, 1970–71-ஆம் ஆண்டுகளில் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : There are five different kinds of small scale industries, Sir. Firstly, there are cottage industries, secondly, there are village industries, thirdly, there are rural industries, fourthly, there are industries, which are known as handicrafts, and fifthly there are rural arts and crafts. Unless the hon. Member is specific as to what he has in mind, it is not possible for me to furnish the information required by him.

THIRU G. SWAMINATHAN : Sir, I learn that the question the hon. Member has asked is about the promotion of cottage industries.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, in that case, the question ought to have been addressed to the Hon. the Minister for Industries who is in charge of cottage industries.